35

# உடுமலை நாராயணகவி பாடல்களில் சமதர்ம சமுதாயம்



**முனைவர். ம. கீதா**
*உதவிப்பேராசிரியர் தமிழத்துறை*
*அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்*
*மகளிர் உயர்கல்வி நிறுவனம்*
*கோவை*

தமிழ்த் திரையிசைக் கவிதை வரலாற்றில் தனித்த முன்னோடியாக விளங்கியவர் உடுமலை நாராயணகவி. இவர் உடுமலைப்பேட்டையில் பூவிளைவாடி என்னும் சிற்றூரில் 1899இல் பிறந்தார். தந்தையார் கிரு‘ணசாமி செட்டியார். தாயார் முத்தம்மாள். திண்ணைப் பள்ளியில் இவர் ஐந்தாம் வகுப்பு வரை கற்று பின் மேற்படிப்பு தொடர முடியவில்லை. தனது 12ஆம் வயதிலேயே பெற்றோரை இழந்த இவர் தன் உறவினர் வீட்டில் வளர்ந்தார். சிறுசிறு கைத்தொழில் செய்தும், வியாபாரம் செய்தும் பொருளீட்டினார். பெரியாரின் சீடராகவும், சமூக சீர்திருத்தக் கருத்துக்களை மக்களுக்கு தமது பாடல்கள் மூலம் வெளிப்படுத்துபவராகவும் விளங்கினார். சங்கரதாஸ் சுவாமிகளிடம் முறையாக நாடகக் கலையைக் கற்றார். இசை, நாடகத்தில் வல்லவர். தமிழ்த் திரைப்படப் பாடல் வரலாற்றில் ஒரு காலகட்டத்தில் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர். இன்னொரு பாரதி என்று கலைவாணரால் பாராட்டப்பட்ட கவிஞர். இவரது பாடல்களில் பொதுவுடைமைக் கருத்துக்களை அதிகமாகக் காணலாம்.

## ஆணுக்குப் பெண் சரிநிகர்

ஆணும் பெண்ணும் சமமானவர்கள் என்பதை உலகிற்கு உணர்த்த சிவபெருமான் தனது ஒருபாகத்தை உமைக்குக் கொடுத்தார் என்றும் திருமால் தனது மார்பை இருப்பிடமாக திருமகளுக்குக் கொடுத்தார் என்றும் புராணங்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

ஆண் - பெண் இருவரும் பிறப்பால் சமமுடையவர் என்பதைப் பாரதிதாசன்,

***"ஆண் உயர்வென்பதும் பெண் உயர்வென்பதும்***
***நீணிலத் தெங்கணும் இல்லை"***

என்று பாடினார்.

உடுமலை நாராயணகவி சமுதாயத்தில் ஆண்பெண் சேர்ந்து உழைத்து வாழ்கின்ற வாழ்க்கையில்தான் அழகிருக்கும் என்றும் அப்படி சேர்ந்து வாழும் குடும்ப அமைப்பின் தேவையை வலியுறுத்தி, இருவருக்கும் கட்டுப்பாடும் கற்பும் பொதுவானது என்கிறார். இதனை,

"கன்னியிருக்கும் காளையற்கும்
கட்டுப்பாட்டை விதைத்து,
கற்புநிலை தவறாத
காதல் பயிர் வளர்த்து"

என்று பாடல் வரிகளின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

ஆண்பெண் இருவருக்கும் கல்வி அறிவு தேவை என்ற கொள்கையுடையவர். படிக்காதவன் மனதில் உயர்ந்த பண்பு இருக்காது என்றும் ஒருவன் பண்புடன் வாழப்படிப்புத் தேவை என்று கூறுகிறார். பெண்ணுக்கு கல்வி அறிவோடு குடித்தனக் கல்வி கட்டாயம் தேவை என்பதை

"ஏட்டுப் படிப்பு படித்தாலும் -புகழ்
பட்டம் பதவிகள் பெற்றாலும் - பெண்கள்
வீட்டுப் படிப்பு படிக்க வேணும்"

என்றும்

"குடித்தன முறைமை படித்திட வேணும்
குடும்பம் நடத்தவும் வேணும்"

என்றும் பெண்கல்வியோடு குடும்பம் நடத்த குடித்தனக் கல்வியும் ஒவ்வொரு பெண்ணும் அறிந்திட வேண்டும் என வலியுறுத்துகிறார்.

குடும்பத்தின் பொறுப்பு ஆண் பெண் இருவருக்கும் ஆண் உழைத்து குடும்பத்தை காத்தால், அபண் அவ்வுழைப்பின் பயனை குடும்பத்தினருக்கு உரிய முறையில் சேர்ப்பவளாக இருக்க வேண்டும். என்ற கருத்தை

"தாலி
கட்டினவன் வேர்வை சிந்த
கஷ்டப்பட்டு சேர்த்த பணம்
துட்டு தனை வீன் செலவுபுரியாமல் பெண்கள்
சிக்கனமாய் வாழ்க்கை செய்து வலகோணும்"

என்று பாடுகின்றார். இப்போது

"கண்ணில் ஒன்றாய் எண்ணி நடப்பது
இந்த காலம்"

என்று இக்கால சமநிலை மாற்றத்தையும் கூறுகின்றார். இவ்வாறு ஆண் பெண் இனைந்து வாழ்வதோடு கல்வி, குடும்பப்பொறுப்பு, உழைப்பு ஆகியவற்றில் சமநிலை இருக்க வேண்டும் என பாடி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

## ஏழை பனக்காரர் ஏற்றத்தாழ்வு

சமுதாயத்தில் மக்கள் தம் தேவைகளை நிறைவு செய்ய தம் உழைப்புடன் தம்மை சூழ்ந்துள்ளவர் உழைப்பையும் பெறவேண்டிய சூழலில் உள்ளனர். இதில் உழைப்பு மட்டுமின்றி உழைப்பின் பயனை துய்ப்பதிலும் அனைவரும் சமபங்கு பெற வேண்டும். அவ்வாறன்றி



உழைப்பு ஓரிடமும். அதன் பயன் வேறொரிடமாகவும் அமைந்தால் ஏழைப் பனக்காரர் என்ற ஏற்றத்தாழ்வு ஏற்படும் என்கிறார். இதனை

"பனக்காரர் தேடுகிற இன்பம் ஏழை
பாட்டாளி மக்கள் படும் துன்பம்"

என்று பனக்காரர் இன்பமாக வாழ ஏழை மக்கள் துன்பப்பட வேண்டிய நிலையை வெளிப்படுத்துகிறார்.

மக்கள் தம்மை கடவுளின் பிள்ளைகள் என்று கருதும்பொழுது ஏன் செல்வர், வரியவர் என்ற பாகுபாடு உள்ளது? அதற்கு காரணம் யார்? விதியா? வினையா? என்ற கேள்விகளைக் கூறி இருதியில் மக்களிடம் உள்ள பகுத்தறிவில்லாத தன்மை தான் இதற்குக் காரணம் என பதிலளிக்கிறார். இச்சமுதாயத்தில் பனக்காரர் ஏற்றத் தாழ்து மாறவேண்டும் என்பதை .

"இருப்பவர் இதயத்திலே
இறக்கமதை விதைக்கனும்
இல்லாதவர் வாழ்க்கையிலே
இன்பப் பயிர் வளர்க்கனும்"

என்ற பாடலின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

## சாதி வேறுபாடு

இந்திய சமுதாயத்தில் வருண அமைப்பும் அதன் உட்கூறான சாதிப்பாகுபாடும் நெடுங்காலமாக இருந்து வருகின்றன. இதில் தாழ்ந்த சாதியினருக்குச் சொத்துரிமையும் கல்வியும் மறுக்கப்பட்டு வந்தன. உழைப்பு மட்டுமே அவர்களுக்கு உரியதாகக் கருதப்பட்டது. இதனை

"நல்ல நாகரிகம் நம்ம ஜாதிக் கடுக்குமோ
காடுங்கரை உழுதுபிழைப்பு - அது
கடவுள் நமக்கமைத்த அமைப்பு"

என்று உழைப்பு கடவுளால் தமக்களிக்கப்பட்டது என்ற ஏழையின் மூட எண்ணத்தையும்

"ஏடெழுத்தானி கொள்ளும்
படிப்பு மிக ஏற்றமான சாதிக்காம்"

என்று கல்வியும் உயர் சாதியினருக்குத் தான் என்ற ஏழையின் எண்ணத்தை வெளிப்படுத்துகின்றார். இது சமுதாயத்தில் காலங்காலமாக ஏழைகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளின் வெளிப்பாடாகும்.

சாதி ஏற்றத் தாழ்வு இருந்தாலும் ஒருபக்கம் இழிக்குலத்தோரையும் இனைந்து அனைத்துக் கொள்ள வேண்டும். என்பதை

"சாதிமதம் இல்லையென்ப எதனாலே? - மனம்
சமத்துவம் தானடைந்த தன்மையாலே"

என்ற பாடலின் மூலம் கூறுகிறார். அதுமட்டும் அல்லாமல்

**"பெண்ணும் ஆணுமெனப் பிறந்த ஜாதி அது**
**மண்மேல் ரெண்டு தான் வேறில்லை**
**இதில் பேதம் காட்டி**
**மனப்பான்மை காட்டி நாம்**
**பிரிந்து வாழ்வதில் பயனில்லை"**

என்ற பாடலில் ஆண் பெண் என்ற பிறவி சாதி தவிர வேறு எந்தப் பிரிவும் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டி சாதி ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தைப் படைத்துக் காட்டியுள்ளார்.

சமுதாயத்தில் ஆண், பெண், சாதி, செல்வம், மதம், நிறம் ஆகியவற்றில் மக்களிடையே ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இன்றைய சமுதாய சீரழிவுகளுக்கும் இவ்வேற்றத்தாழ்வுகளே காரணமாக அமைகின்றன. இவற்றை சீர்திருத்த முயன்ற அறிஞர்களுள் இவரும் ஒருவராகத் திகழ்கிறார்.